2007 ஜனவரி 22]

அறிவுறுத்தல்களின்பேரில், அவர்களாகவே அதைத் திருத்திக் கொண்டால்தான் அது சரியாக இருக்கும். நாங்கள் பார்த்தால் நடவடிக்கை எடுக்கலாம். காவல் துறை நடவடிக்கை எடுக்கிறது. துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும், பல இடங்களிலே இதுபோல அறிவுறுத்தலாம். இப்போது பார்த்தால்கூட, கல்லூரிகளில் இருக்கின்ற மாணவர்கள் நேரடியாக ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு—அவர்களுக்கெல்லாம் எந்த இடத்திற்குச் செல்ல வேண்டும்? யாரைப் பார்க்க வேண்டும்? எப்படி உரிமம் பெறுவது என்பதுகூட தெரியாதிருந்த காலம் இருந்தது. இப்போது கல்லூரிக்கே சென்று, எங்களுடைய அதிகாரிகள் அவர்களுடைய ஆவணங்களைச் சரி பார்த்து, அவர்களுக்கு உடனடியாக L.L.R. licence கொடுக்கிற பணியைக்கூட நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம். துறையின் சார்பாகத் தொடர்ந்து இது அறிவுறுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

6—

கட்டட வசதி

***12192—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் குடியிருப்புக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இச்செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

[2007 ஜனவரி 22

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகமும், அதேபோல வட்டாட்சியர் குடியிருப்பு அலுவலகமும் வாடகைக் கட்டடங்களில் பல ஆண்டுகளாக இயங்கி வந்தன. மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் 1999–2000 ஆம் ஆண்டில் முதலமைச்சராக இருந்த காலத்திலே, ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஒரு கோடி ரூபாய் நிதி கொடுத்து, அந்தப் பணி அப்போதே நிறைவேற்றப்பட்டுவிட்டது. ஆனால், வட்டாட்சியர் குடியிருப்பு அலுவலகம் மட்டும் தொடர்ந்து வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, இந்த ஆண்டு அந்தக் கட்டடத்தைக் கட்டித் தருவதற்கு நிதி ஒதுக்கித் தர முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டாட்சியர் குடியிருப்பு கட்டுவதற்காக ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, ஒரு இடம் தேர்வு செய்யப்பட்டது. அந்த இடத்தைத் தற்சமயம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பயணியர் விடுதி கட்டுவதற்காக ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கேட்டிருக்கிறார். ஆகவே, இடம் தேர்வு செய்யப்பட்டபின், அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டாட்சியர் அலுவலகத்திலே சுமார் 3 ஏக்கர் நிலம் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்திலேயே வட்டாட்சியர் குடியிருப்பு அலுவலகம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து, நிதி ஒதுக்கித் தர முன் வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே குடியிருப்பு கட்டித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அந்த இடத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒதுக்கீடு செய்தவுடன், அந்த இடத்திலே பயணியர் விடுதி கட்டித் தர வேண்டுமென்று மாற்றிக் கேட்டிருக்கிறார். உறுப்பினருக்கு, கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசையாக இருக்கிறது. இருந்தாலும், அது பற்றி அவர் சொல்வதை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன்.

2007 ஜனவரி 22]

திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, இலுப்பூரில் புதிதாகச் செயல்பட்டு வரும் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற நிதியாண்டிலே வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டுவது சம்பந்தமாக, பகுதி-II திட்டத்திலே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் வட்டாட்சியர் அலுவலகம் மிகுந்த மோசமான நிலையிலே, இடிந்து விழுகிற ஒரு நிலையிலே இருக்கிறது. பல ஆண்டுகளாக அதை மாற்றியமைக்க வேண்டும், அதைச் சீரமைக்க வேண்டுமென்ற கோரிக்கை இருந்திருக்கிறது. அது குறித்து ஏதாவது திட்டம் அரசினுடைய பரிசீலனையில் உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பேரவைத் தலைவர்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதியாண்டிலே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, ஏறத்தாழ 9 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு மேல், பல பழுதுபட்ட வட்டாட்சியர் அலுவலகங்களுக்குப் புதிய அலுவலகங்கள் கட்டுவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்து, அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வருகின்ற நிதியாண்டிலே, அப்படிப் பழுதடைந்திருந்தால், அதிகமாக பழுதடைந்திருக்கின்ற வட்டாட்சியர் அலுவலகங்களைக் கண்டறிந்து, அவற்றிற்கு முன்னுரிமையை அரசு வழங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.

திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரணியலில் செயல்படும் உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகியவை மிகவும் பழைய கட்டடங்களிலே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத கேள்வியாக இருக்கிறது, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூரிலே இருக்கின்ற வட்டாட்சியர் அலுவலகம், ஓராண்டு காலமாக ஓட்டுக் கொட்டகையிலே இயங்கி வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த நடப்பாண்டிலே, ஓட்டுக் கொட்டகையிலே இயங்கி வரும் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுத்து, கட்டிக் கொடுப்பாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையைப் பற்றி நான் ஏற்கெனவே விரிவாகச் சொல்லியிருக்கின்றேன். வருகின்ற நிதி ஆண்டிலே, ஏற்கெனவே பழுதுபட்டிருக்கின்ற வட்டாட்சியர் அலுவலகங்கள் எந்த அளவுக்குப் பாதிப்படைந்திருக்கின்றன என்பதை அரசுத் துறையினுடைய அலுவலர்களை அனுப்பி பார்த்து, அது பற்றி நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி. மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

7—

நியாய விலைக் கடை

***398—திரு. கோ. அரி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், நார்த்தவாடா ஊராட்சியில் நியாய விலைக் கடை துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், மணலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்படும் ஜாகிர்மங்கலம் என்கிற கடையின்கீழ் நார்த்தவாடா என்கிற கிராமத்திலே பகுதி நேரக் கடை திறக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தக் கடையைப் பொறுத்த அளவிற்கு அந்தக் கிராமத்திலே 133 கார்டுகள்தான் அந்தப் பகுதிக்கென்று இருக்கின்றன. அரசாணை. ஏற்கெனவே இரண்டு